**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.162/2018</u>**

பெயர்–திரு.பசுவண்ணா நாள்.10.04.2026

பி.வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.2 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.71/2013 என்ற வழக்கு நடந்தது என்றால் சரிதான் அதில் நான் தரப்பினர் இல்லை. எனது அப்பாதான் தரப்பினராக இருந்தார். மேற்படி வழக்கு எந்த சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அ.வ.எண்.71/2013 சொத்தும் இந்த வழக்கின் சொத்தும் ஒன்றா என்றால் ஆமாம். அ.வ.எண்.71/2013 வழக்கில் வண்டித்தடத்திற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வண்டித்தடத்திற்காகவும், 13 செண்ட்க்காககவும், தாக்கல்செய்யப்பட்டது. நான் சொல்வது சரியல்ல வண்டித்தடத்திற்காக மட்டும்தான் தாக்கல் அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே அ.வஎண்.71/2013 ன் சொத்து விவரமும் இந்த வழக்கின் சொத்து விவரம் வேறு வேறு என்றால் சரியல்ல. வாதியின் பூமிக்கு வடபுறம் உள்ள கிழமேல் வண்டித்தடத்திற்கு வடக்கு எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த பூமிக்கு வடபுறம் தொட்டமாதப்பா மகன் சென்னெஞ்சப்பா பூமி இருந்ததா என்றால் இல்லை. சென்னெஞ்சப்பா என்பவர் வாதியின் மாமா மகன் என்றால் சரிதான். சென்னெஞ்சப்பாவிற்கு பாத்தியப்பட்ட பூமியை வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. எனது அப்பாவின் பூமிக்கு வடபுறம் ரோடு தான் உள்ளது. ரோட்டின் வடபுறம் சென்னெஞ்சப்பா பூமி உள்ளதா என்றால் இல்லை. வாதியின் மகன் ரமேஷா இதே நீதிமன்றத்தில் அவ.எண்.236/2013 என வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு 16.03.2016 தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அவ.எண்.236/2013 வழக்கில் சத்தியமங்கலம்

சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு வழக்கு1/03/2017 தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் சொத்து விவரத்தில் அவரது பூமியின் மேற்கும், வடக்கும் ரோடு உள்ளது என குறிபிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கும், தெற்கும் புட்டுசுவமப்பா பூமி உள்ளதாக குறிபிடப்பட்டிருந்தால் அது தவறு ஆகும். என்னிடம் படித்து காண்பிக்கப்படும் பி.வா.சா.–ஆ.3 ஆவணத்தில் மேற்கும், வடக்கும் ரோடு , கிழக்கும் தெற்கும் புட்டுசுவமப்பா பூமி (1ம் பிரதிவாதி ) பூமி என எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது ஆனால் கிழக்கில் குண்ணுமாதப்பா பூமியும் மற்றும் தெற்கு சாந்தமல்லப்பா பூமியும் உள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் உள்ள செக்கு பந்தி விவரம் தவறானதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது பூமிக்கு வடபுறம் 13 செண்ட் உள்ளதாக அவ.எண்.236/2013 வழக்கில் சொத்து விவரம் குறிபிட்டபட்டுள்ளது என்றால் சரியல்ல அவ்வாறு 13 செண்ட் அங்கு இல்லை. வாதியின் பூமி எங்களது பூமிக்கு தென்புறம் உள்ளது. தற்போது தாக்கல் செய்துள்ள வழக்கு எங்களது பூமியின் தென்புறம், வாதியின் பூமியை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. அவ.எண்.236/2013 வழக்கில் பிரதிவாதியின் பூமிக்கு வடபுறம் உள்ள வாதியின் பூமியை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் இந்த வழக்கு பிரதிவாதியின் பூமிக்கு தென்புறம் உள்ள வாதியின் பூமியை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எனவே இரண்டு சொத்துக்களும் வேறு வேறானது என்றால் சரியல்ல. ஒரே சொத்துதான். பிரதிவாதியின் பூமிக்கு தென்புறம் கிழமேலாக ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த தடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக தான் அவ எண்.71/2013 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ எண்.71/2013 வழக்கிலோ, அவ எண்.236/2013 வழக்கிலோ நாங்கள் பூமியை அளக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் பூமியை அளந்தார் என்றால் சரிதான் அளக்கும்பொழுது நான் உடன் இருந்தேன்.

மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 8செண்ட் வாதியின் பூமியை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல. அளவுகள் சரியாக உள்ளதாக ஆணையர் தெரிவித்தார், நீதிமன்ற ஆணையர் வாதியின் பூமியில் 8 செண்ட் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அறிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். ஆனால் அந்த அறிக்கை தவறானது ஆகும். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை ஏதும் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. மீண்டும் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா சொத்தை அளக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பிரதிவாதி அவரது பூமியின் தென்வடல் ஓரத்தில் 4 அடி தள்ளி 12 தென்னை மரங்கள் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது பூமியில் தான் வைத்துள்ளேன். 12 தென்னைமரங்கள் பிரதிவாதி பூமியில் தான் உள்ளது என காட்ட அளந்து ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி தரப்பில் 2 எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் கூடுதல் எதிர் வழக்குரையில் 28.11.2020ம் தேதி வாதியின் பூமி அளவீடு செய்து அதில் பிரதிவாதியின் பூமி குறைவாக உள்ளதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் அவ்வாறு அளவீடு செய்யப்பட்டது என காட்ட ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், நான் தாக்கல் செய்யவில்லை எனது அப்பா தாக்கல் செய்துள்ளார். வாதி பூமியை கிரையம் செய்த 1995ல் எனக்கு 12 வயது தான் என்பதால் தாவா சொத்து பற்றி முழு விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு முழு விபரம் தெரியும். வாதியின் பூமியில் 8 செண்டை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றாலும் அதனை நாங்கள் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றாலும் சரியல்ல. வாதியின் மகன் ரமேஷா இந்த வழக்கை நடத்துவதற்கு 04.05.2022ல் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வழக்கு 2018ல் வாதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட 2 வழக்குகளிலும் அளக்காமல் தள்ளுபடியாகிவிட்டது என்றாலும்,

தற்பாது இந்த வழக்கில் அளவீடு செய்ததில் ஆக்கிரமிப்பு உள்ளதை தெரிந்துகொண்டு பொய்யான எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/ her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.04.10 17:17:48 +0530

District Munsif